# மூன்று அம்மன் தரிசனம்

இச்சா சக்தி - ஞான சக்தி - க்ரியா சக்தி :

மூவுலகை ஆளுகின்ற அன்னை ஆதி பராசக்தி பூவுலகில் மானிட ஜென்மங்களுக்கு தாயாகவும் இருந்து ஆள்கின்றாள்.அந்த பராசக்தி தான் இச்சா சக்தி,ஞான சக்தி,க்ரியா சக்தி என முப்பெரும் தேவியாய் அருள்பாலித்து வருகின்றாள்.

திருவுடையம்மன் - இச்சா சக்தி
வடிவுடையம்மன் - ஞான சக்தி
கொடியுடையம்மன் - கிரியா சக்தி

இச்சா சக்தி

விருப்பங்களை நிறைவேற்றுபவள், சௌந்தர்யத்தின் இருப்பிடம், லாவண்யமானவள், மனதை சுண்டி இழுத்து அதில் எண்ணற்ற கனவுகளை விதைப்பவள்,அமைதிக்கான ஆதாரம்,நமக்கு சௌபாக்கியங்களை தருபவள்.

ஞான சக்தி

அறிவு தருபவள்,சகல வித்தைகளிலும் நமக்கு வெற்றி தருபவள்,நமது புத்தியில் உறைபவள்,கவிதையாக, காவியமாக, சங்கீதமாக அருள் பாலிப்பவள்

கிரியா சக்தி

வாழ்க்கை வளம்பெற தூண்டிவிடுபவள், துவக்கிவைப்பவள், ஒளிமயமான வாழ்கையை நமக்கு அமைத்துக் கொடுப்பவள், செல்வம், செல்வாக்கு தந்து சுகமான வாழ்வருளும் சர்வேஸ்வரி.

பவுர்ணமியும், வெள்ளிக்கிழமையும் சேர்ந்து வரும் தேதியில் திருவுடை, வடிவுடை, கொடிஉடை ஆகிய மூன்று அம்மனையும் ஒரே நாளில் வழிபட்டால், வாழ்க்கை ஒளிமயமாகும் என்ற நம்பிக்கை பக்தர்களிடையே உள்ளது. பவுர்ணமி, வெள்ளிக்கிழமை தினத்தில் வருவது மிக உயர்ந்ததாக மகான்கள், யோகிகள், ஞானிகள் கூறியுள்ளனர்.

இந்த நாளில் மீஞ்சூர் அடுத்த மேலூர் திருவுடையம்மனை காலையிலும் திருவொற்றியூர் வடிவுடையம்மனை உச்சிகாலத்திலும், திருமுல்லைவாயல் கொடிஉடையம்மனை மாலையிலும், வரும் பவுர்ணமி தினத்தில் தரிசனம் செய்யலாம். இந்த தரிசனங்களைச் செய்வது வாழ்க்கையை செம்மையாக்குவதோடு, ஒளிமயமாக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. திருவொற்றியூர் வடிவுடையம்மனையும், திருவுடையம்மனையும், திருமுல்லைவாயல் அம்மனையும் பக்தர்கள் தரிசரிப்பதற்காக சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வரும் 9ம் தேதி அதிகாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை கோவில் நடை திறந்திருக்கும். முடிந்த அன்பர்கள் மூன்று நாயகிகளையும் தரிசிக்கலாம்.

1) திருவுடையம்மன் - இச்சா சக்தி - அதிகாலை தரிசனம் - மேலூர்(மீஞ்சூர்,சென்னை)

2) வடிவுடையம்மன் - ஞான சக்தி - உச்சிவேளை தரிசனம் - திருவொற்றியூர், சென்னை

3) கொடியுடையம்மன் - க்ரியா சக்தி - மாலை தரிசனம் - திருமுல்லைவாயல், சென்னை